பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 11 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள **Fenjal** புயல் இன்று மாலை காரைக்காலுக்கும் மாமல்லபுரத்துக்கும் இடையே கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
2. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் பணியில் மகளிரின் பங்கு மகத்தானது என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
3. பாம்பு கடியால் ஏற்படும் பாதிப்பை மாநில அரசுகள் பொது சுகாதார சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டுமென்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
4. மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தல் வெளிப்படைத் தன்மையுடன் நேர்மையாக நடைபெற்றதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
5. சையது மோடி பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளார்

*<u>---- இனி விரிவான செய்திகள் ----</u>*

**[]<<<>>>[]**

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள **Fenjal** புயல் இன்று மாலை காரைக்காலுக்கும் மாமல்லபுரத்துக்கும் இடையே கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த புயல் தற்போது சென்னைக்கு தென்கிழக்கே 90 கிலோமீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

இந்த புயல் பத்து கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

*<u>( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) -42--- செகண்ட்</u>*

இந்தப் புயல் காரணமாக தமிழகத்தின் வடகடலோர மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று இரவு முதல். தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

சாலைகளில் மழைநீர் தேங்கியுள்ளதாக வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளகி வருகின்றனர்.

புயல் காரணமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருவதாகவும், தொடர்மழை மற்றும் புயல் காரணமாக, சென்னை விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*<u>(வாய்ஸ் பைட் - சுரேகா 52 செகண்ட்ஸ்)</u>*

திருவள்ளூர் மாவட்டத்திலுத் பலத்த காற்றுடன் தொடர்ந்து கனமழை பெய்து வருவதாகவும், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தீயணைப்பு மீட்புப் பணி வீரர்கள் உபகரணங்களுடன் தயார் நிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விழுப்புரம் மாவட்டத்தில் பிற்பகல் முதல் கனமழை பெய்து வருவதுடன் காற்றின் வேகமும் அதிகரித்து காணப்படுகிறது.

மாநில அமைச்சர் திரு பொன்முடி மரக்காணம் பகுதியில் உள்ள மீனவர் கிராமங்களை இன்று நேரில் பார்வையிட்டார். அங்குள்ள மக்களை நிவாரண முகாம்களில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஃபெஞ்சல் புயலுக்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மாநில அரசு எடுத்துள்ளது என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரக் கால செயல்பட்டு மையத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு ஆகிய இடங்களில் போதிய அளவில் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு மக்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

அவர்களுக்கு தேவையான உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று இரவு மிகக்கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு தாம் அறிவுறுத்தி உள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமிழக பயணத்தை முடித்துக் கொண்டு இன்று தனி விமானத்தில் புதுதில்லி புறப்பட்டார்.

கோவை விமான நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் திரு கிராந்திக் குமார் பாடி, மாநகர காவல்துறை ஆணையர் திரு பாலகிருஷ்ணன் மற்றும் உயரதிகாரிகள் அவரை வழியனுப்பி வைத்தனர்.

முன்னதாக இன்று காலை உதகையிலிருந்து சாலை மார்க்கமாக குடியரசுத் தலைவர் கோவை விமான நிலையம் வந்தடைந்தார்.

**[]<<<>>>[]**

பிரதமரின் ஸ்வநிதி, விஸ்வகர்மா, முத்ரா உள்ளிட்ட திட்டங்களின் கீழ 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு ஆயிரத்து 121 கோடி ரூபாய் கடன் வழங்குவதற்கான அனுமதி கடிதங்களை மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று பீகார் மாநிலம் ஜான்ஜிகார்பூரில் வழங்கினார்,

ஸ்டாண்டர்டு அப் இந்தியா திட்டம், கிசான் கடன் அட்டை திட்டம் ஆகியவற்றின் கீழ் விவசாயிகளுக்கு கடனுதவிகளையும் அவர் இந்நிகழ்ச்சியில் வழங்கினார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களை சந்தித்து பேசிய திருமதி நிர்மலா சீதாராமன், அவர்கள் காட்சிக்கு வைத்திருந்த கைவினைப் பொருட்கள், மண்பாண்டங்கள் மற்றும் காளான் உள்ளிட்ட வேளாண் விளைப் பொருட்களையும் பார்வையிட்டார்.

அவர்களிடையே உரையாற்றிய திருமதி நிர்மலா சீதாராமன், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சிபெற்ற இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் மகளிரின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறினார்.

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு உதவிடும் வகையில் ட்ரோன்களை இயக்குவதற்கான பயிற்சி மற்றும் கடனுதவி திட்டங்களையும் மத்திய அரசு செய்து தருவதாகக் கூறினார்.

மகளிர் தலைமையிலான வளர்ச்சி என்ற பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்குப் பார்வையில் லட்சாதிபதி பெண்கள் திட்டத்தையும் மத்திய அரசு முழுவீச்சில் செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பீகார் மாநிலத்தின் வடக்குப் பகுதியின் வளர்ச்சியை உறுதி செய்வதில் மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாகக் கூறிய நிதி அமைச்சர், கடந்த பட்ஜெட்டில் இப்பகுதியை மேம்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பாம்பு கடியால் ஏற்படும் பாதிப்பை மாநில அரசுகள் பொது சுகாதார சட்டத்தின் கீழ் நோயாக பதிவு செய்ய வேண்டுமென்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.,

இது தொடர்பாக மத்திய சுகாதாரத்துறையின் முதன்மைச் செயலர் திருமதி புனியா ஸ்ரீவத்சவா எழுதியுள்ள கடிதத்தில், அனைத்து மாநில சுகாதாரத்துறை செயலர்களுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் பாம்பு கடியால் உயிரிழப்பு, உடல்நலக்குறைவு மற்றும் உடல் உறுப்புகள் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்படும் மக்களுக்கு உரிய நிவாரணம் மற்றும் அரசின் உதவிகள் கிடைக்கும் வகையில் இதனை நோயாக பதிவு செய்து சிகிச்சை அளிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

விவசாயிகள் மற்றும் பழங்குடியின மக்கள் பாம்பு கடியால் அதிக அளவில் பாதிப்புக்கு உள்ளாவதை கருத்தில் கொண்டு மத்திய அரசு தேசிய அளவில் செயல் திட்டம் ஒன்றை வகுத்துள்ளதாவும் அவர் கூறியுள்ளார்.

2030-ஆம் ஆண்டுக்குள் பாம்பு கடியால் ஏற்படும் உயிரிழப்பை 50 சதவீதம் குறைக்கும் இலக்கோடு இத்திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாம்பு கடி தொடர்பான தகவல்களை முறைப்படி பெற்று பதிவு செய்வதற்கு மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாம்பு கடி பொது சுகாதார சட்டத்தின் கீழ் நோயாக அறிவிக்கப்படுவதன் மூலம், இதற்கான சிகிச்சை தனியார் மருத்துவமனைகளில் அளிக்கப்பட்டாலும் அது குறித்த தகவலை அரசுக்கு தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகிறது என்றும் சுகாதாரத்துறை செயலர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஒருநாள் பயணமாக குஜராத் சென்றுள்ள மத்தி தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், புல்லெட் ரயிலுக்கான தண்டவாளங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை சூரத்தில் பார்வையிட்டார்.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா சட்டப்பேரவைக்கு அண்மையில் நடந்து முடிந்த தேர்தல் வெளிப்படைத் தன்மையுடன் நேர்மையாக நடைபெற்றதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இது தொடர்பாக காங்கிரகஸ் கட்சி சார்பில் அளிக்கப்பட்ட புகாருக்கு தேர்தல் ஆணையம் அளித்துள்ள இடைக்கால பதிலில், காங்கிரஸ் கட்சி சார்வில் தெரிவிக்கப்பட்ட புகார்கள் குறித்து முறைப்படி ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்துள்து.

அடுத்த மாதம் மூன்றாம் தேதி நேரிடையாக காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தல் ஆணையத்துக்கு வந்து தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என்றும், கூறியுள்ளது.

இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு விட்டதாகவும், இதில் ஏதும் மாறுபாடுகள் தெரியவரவில்லை என்றும் தேர்தல் ஆணையம் முதற்கட்டமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளது,.

**[]<<<>>>[]**

சையது மோடி பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் இன்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் சக வீராங்கனை உன்னத்திக்கூடாவை 21-12, 21-9 என்ற நேர் செட்டில் வென்று பி வி சிந்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மகளிர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தெரசா ஜாலி – காயத்திரி கோபிச்சந்த் இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.,

இந்த இணை – தாய்லாந்து இணையை 18-21, 21-18, 21-10 என்ற செட் கணக்கில் வென்றது.

**[]<<<>>>[]**

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் 43 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**[]<<<>>>[]**

உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் **Ding Liren** இடையேயான நான்காவது சுற்று ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

***End of News***